இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு மக்கள் கூட்டத்தை மீண்டும் தம்மிடம் வரவழைத்து, அவர்களை நோக்கி, “நான் சொல்வதை அனைவரும் கேட்டுப் புரிந்துகொள்ளுங்கள். வெளியேயிருந்து மனிதருக்குள்ளே சென்று அவர்களைத் தீட்டுப்படுத்தக் கூடியது ஒன்றுமில்லை. மனிதருக்கு உள்ளேயிருந்து வெளியே வருபவையே அவர்களைத் தீட்டுப்படுத்தும். ஏனெனில் மனித உள்ளத்திலிருந்தே பரத்தைமை, களவு, கொலை, விபசாரம், பேராசை, தீச்செயல், வஞ்சகம், காமவெறி, பொறாமை, பழிப்புரை, செருக்கு, மதிகேடு ஆகியவற்றைச் செய்யத் தூண்டும் தீய எண்ணங்கள் வெளிவருகின்றன. தீயனவாகிய இவை அனைத்தும் உள்ளத்திலிருந்து வந்து மனிதரைத் தீட்டுப்படுத்து கின்றன” என்றார். (மாற்கு 7:21-23)

# அமைதியின் நற்செய்தியை அறிவிக்க அனைவரும் அழைக்கப்படுகிறோம்!

**வத்திக்கான் :** எல்லா மனித இனத்திற்கும், முன்னெப்போதையும் விட இன்று, அமைதி



யின் நற்செய்தி அதிகம் தேவைப்படுகிறது என்றும், ஒவ்வொரு கிறிஸ்தவரும் இந்த அமைதியின் நற்செய்தியை அறிவிக்கவும் பகிர்ந்து கொள்ளவும் அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் கடிதம் ஒன்றில் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

உலக அமைதிக்காக 'ரிமினியில் உள்ள சதுக்கத்தில் பத்தாம் ஆண்டு செபமாலை நிகழ்வை நடத்தும் 'துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கான நாசரேத் அமைப்பு ஒன்றுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார் திருத்தந்தை.

அன்பான பிறரன்புப் பணிகள், நெருக்கம் மற்றும் குறிப்பாக அநீதி, அடக்குமுறை, வெறுப்பு மற்றும் பேராசை ஆகியவற்றால் காயமடைந்த மக்களின் வலியுடன் ஒன்றிணைந்ததற்கான உங்கள் சாட்சியத்திற்கு நன்றி என்று உரைத்துள்ளார் திருத்தந்தை.

இந்நிகழ்வில் பங்குபெறும் அனைவரும், இறைவேண்டலின் தருணங்களில், ஆர்வமிகுந்த இதயங்களுடன் அனைவருக்கும் மரியாதை, வரவேற்பு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய உடன்பிறந்த உறவுக்கான கலாச்சாரத்தை ஊக்குவிப்பவர்களாக இருப்பார்கள் என நான் நம்புகிறேன் என்றும், இங்குதான் ஒன்றிப்பின் அப்பத்தையும் மகிழ்ச்சியையும் காண முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை.

அன்னை கன்னி மரியாவின் உதவியை நாடுமாறு நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன் என்று அறிவுறுத்தியுள்ள திருத்தந்தை, அமைதியும் நல்லிணக்கமும் நிறைந்த எதிர்காலத்தை எதிர்நோக்கத் துணிவதற்கான நம்பிக்கையின் ஒளியை நம் ஆன்மாக்களில் ஏற்றி வைப்பவராக அவர் இருக்கட்டும் என்று உரைத்துள்ளார்.

அத்துடன், திருத்தந்தையின் *Laudato s’* மற்றும் *Fratelli tutti* ஏடுகளினால் தூண்டப்பட்ட திருத்தந்தையின் இவ்வுலக அமைதி தின தலைப்பு, யூபிலி ஆண்டின் மையக்கருத்தான நம்பிக்கை மற்றும் மன்னிப்பை தன்னுள் கொண்டுள்ளது எனக்கூறும் ஒருங்கிணைந்த மனித வளர்ச்சிக்கான திருப்பீடத்துறை, இந்த யூபிலி ஆண்டில் நாம் மனமாற்றத்தையும், ஒப்புரவையும் அமைதியையும் கொணர அழைக்கப்படுகிறோம் என தெரிவித்துள்ளது.

மோதல்களும் சமூகப்பாவங்களும் மனித குலத்தை துன்புறுத்திவரும் இன்றைய காலக்கட்டத்தில் யூபிலி ஆண்டின் நம்பிக்கையின் ஒளியில் ஆன்மீக, சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சார மாற்றங்களை நோக்கி நாம் வழிநடத்தப்படுவோம் என்று நம்பிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனவரி முதல்தேதி, அதாவது இறைவனின் தாயாம் அன்னை மரியாவின் விழாவன்று அனைத்துலக அமைதி தினம் திருஅவையில் சிறப்பிக்கப்படும் வழக்கத்தை 1967ஆம் ஆண்டு புனித திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்கள் துவக்கிவைத்தார்

கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - **வத்திக்கான்**

# மெந்தகாப் நகரின் இடைவிடா சகாய அன்னை திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

பகாங், மெந்தகாப்: இங்குள்ள இடைவிடா சகாய அன்னை பங்கு அதன் 61ஆம் ஆண்டுத் திருவிழாவை கடந்த ஆகஸ்ட் 15 தொடங்கி 18 வரை விமரிசையாக கொண்டாடிந்து. தொடக்கமாக, பங்குத் தந்தை அருள்பணி தெரன்ஸ் தோமஸ் அவர்கள் ஆகஸ்ட் 15 அன்று அன்னை மரியாவின் விண்ணேற்பு பெருவிழா திப்பலியையும் ஆகஸ்ட் 18-ஆம் திகதி திருவிழா திருப்பலியை ‘மரியாவும் மறைத்தூதும்’ என்ற கருப்பொருளில் கொண்டாடினார்.

இரண்டாவது நாள் ஆகஸ்ட் 16 அன்று, பெந்தோங் திருஇருதய ஆண்டவர் பங்கின் பங்குத் தந்தை அருள்பணி கிளமென் லிம் அவர்கள் "மரியாவும் ஒன்றிப்பும்" என்ற கருப்பொருளில் திருப்பலியை நிறைவேற்றினார். அடுத்து அருள்பணி தெரன்ஸ் தோமஸ் ஆகஸ்ட் 17 அன்று "மரியாவும் பங்கேற்பும்" என்ற கருப்பொருளுடன் காலை திருப்பலியைக் கொண்டாடினார். அன்று திருப்பலிக்கு முன்பாக நோயாளிகளுக்குத் திருத்தைலம்



பூசுதல் சடங்கும், செபமாலையும், நவநாள் இறைவேண்டலும் இடம்பெற்றது.

சனிக்கிழமை ஆகஸ்ட் 17 அன்று, குவாந்தான் புனித தோமையார் பங்குத் தந்தை அருள்பணி ஜோர்ஜ் பாக்கியசாமி அவர்கள் "மரியாவும் பங்கேற்பும்" என்ற கருப்பொருளுடன் மாலை விழாத் திருப்பலியைக் கொண்டாடினார். தொடர்ந்து திருபவனியும் ஏற்பாடுச் செய்யப்பட்டிருந்தது. அவரது மறையுரையில், ஞானம், வாழ்க்கை மற்றும் வாழ்வளிக்கும் உணவு பற்றி பகிர்ந்து கொண்டார். ஞானத்தைப் பொறுத்தவரை, நமது வாசிப்பின் மூலம் அறிவைப் பெறலாம், மேலும் பெற்ற ஞானம் மேலிருந்து வருகிறது என்றார். ஞானம் இயேசு கிறிஸ்துவில் நம்முடைய விசுவாசத்தையும் நம்பிக்கையையும் கட்டமைக்கிறது. நம்மைச் சுற்றியுள்ளவற்றில் அல்ல, நமக்கு மேலே உள்ளவற்றை நம் கண்களைநோக்கவும் செய்கிறது என்றார்.



நிறைவாக, நற்கருணை ஆசீரும் தொடர்ந்து உணவும் பரிமாறப்பட்டது.

# முஸ்லீம் அல்லாத வழிபாட்டுத் தலங்களில் இஸ்லாத்தைப் போதிக்கக் கூடாது

**கோலாலம்பூர்:** பௌத்தம், கிறிஸ்தவம், இந்து, சீக்கியம் மற்றும் தாவோயிசம் ஆகிய சமயங்களின் மலேசிய கூட்டு மன்றம் (MCCBCHST) திரெங்கானு முஃப்தி டாக்டர் முகமட் சப்ரி ஹரோனின் சமீபத்திய பகிர்வையொட்ட கவலை தெரிவித்துள்ளது. கடந்த ஆகஸ்ட் 4, 2024 தேதியிட்ட ஃபோகஸ் (FOCUS ) மலேசியாவின் அறிக்கையின்படி, இஸ்லாமிய போதனைகளைப் பரப்பும் மற்றும் அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் முஸ்லிம்கள் இதர சமயங்களின் இடங்களுக்குச் செல்லலாம் என்று சுட்டிக் காட்டினார்.

ஆகஸ்ட் 10 தேதியிட்ட அதன் அறிக்கையில், MCCBCHST முஸ்லீம் அல்லாதவர்களுக்கான வழிபாட்டுத் தலங்கள், முஸ்லிம்களுக்கான மசூதிகள் அனைத்தும் அவரவர் தங்கள் நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான புனித இடங்களாக செயல்படுகின்றன என்று வலியுறுத்தியது. கூட்டரசு அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 11, தனிநபர்கள் தாங்கள் சார்ந்த சமயத்தைப் பின்பற்றுதற்கும் பின்பற்றுவதற்கு உரிமையை வழங்குகிறது.

முப்தியின் மேற்கண்ட பரிந்துரையானது முஸ்லீம் அல்லாத வழிபாட்டுத் தலங்களின் புனிதத்தன்மையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் மற்றும் பல்வேறு மதச் சமூகங்களுக்கு இடையே பதற்றத்தை உண்டாக்கும் என்று மன்றம் கவலையுறுகிறது. இத்தகைய நடவடிக்கை கள் பல மலேசிய தண்டனைச் சட்டப் பிரிவுகளின் கீழ் சட்ட ரீதியான விளைவு களையும் ஏற்படுத்தலாம் .

பிரிவு 298: சமய உணர்வுகளைப் புண்படுத்துதல்

பிரிவு 298A: சமய அடிப்படையில் நல்லிணக்கத்தை பாழ்படுத்துல்.

பிரிவு 505(c): வன்முறைகளைத் தூண்டக்கூடிய அறிக்கைகள் வெளியிடுதல்.

MCCBCHST, அனைத்து மதக் குழுக்களின் உரிமைகளையும் மதித்து கூட்டரசு அரசியலமைப்புச் சட்டம் மற்றும் மலேசிய சட்டங்கள் பற்றிய சரியான புரிதலைக் கடைப்பிடிக்குமாறு திரெங்கானு முஃப்தியை வலியுறுத்தியது. ஒற்றுமை மற்றும் மதங்களுக்கு இடையிலான உரையாடல் ஊக்குவிக்கப் படும் அதே வேளையில், ஒருவரின் நம்பிக்கையை மற்றொரு சமயத்தின் வழிபாட்டுத் தலத்திற்குள் அனுமதியின்றி பிரச்சாரம் செய்யும் எந்தவொரு முயற்சியும் பொருத்தமற்றது மற்றும் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் என்று மன்றம் எடுத்துரைத்துள்ளது. மதங்களுக்கு இடையே உயர்ந்த மரியாதை மற்றும் அனைத்து வழிபாட்டுத் தலங்களின் புனிதத்தைப் பராமரிக்கும் நெறிமுறைகளைப் பின்பற்றவும் கவுன்சில் அழைப்பு

# முதன்மை மறைப்பரப்பாளர்களான பெற்றோரின் பங்கு

## இயங்கலை வழி உருவாக்கப்பயிற்சி

**பினாங்கு:** ‘முதன்மை மறைப்பரப்பாளர்களான பெற்றோரின் பங்கு’ எனும் தலைப்பில் ஓர் ஊக்கமளிக்கும் இயங்கலை (online) அமர்வு, புதிய நற்செய்தி அறிவிப்புக் கழகத்தால் (INE) சமீபத்தில் நடத்தப்பட்டது, இப்பயிற்சி இக்கழகத்தின் தலைவர் மைக்கேல் சேவியர் அவர்களால் நடத்தப்பட்டது, என்பது குறிப்பிடத் தக்கது. மேலும் கிளமென்ட் ஜெர்மியா ராஜ், அவரது மனைவி பமீலா மற்றும் அவர்களது நான்கு குழந்தைகள்: ஜடோன் (வயது 13), ஃபெய்த் (12), கிரேஸ் (9) ஆகியோரின் இதயப்பூர்வமான பகிர்வும் இடம்பெற்றது. மற்றும் ஐசக் (8). புக்கிட் மெர்டாஜாமில் உள்ள புனித அன்னா பங்கில் இருந்து ஜெனிஃபர் தான் ஆகியோர் பங்கேற்றனர்.



அனைத்து பங்கேற்பாளர்களையும் ஊக்குவிக்க தூய ஆவியானவரை அழைக்கும் இறைவேண்டலுடன் அமர்வு தொடங்கியது. தனிப்பட்ட இறைவேண்டல் மூலம் கிறிஸ்துவில் வேரூன்றியிருப்பதன் முக்கியத்துவத்தை கிளெமென்ட் மற்றும் பமீலா வலியுறுத்தினர், இயேசுவோடு நேரத்தை செலவிடுவது, கடவுளுடைய வார்த்தையை அறிந்து வாழ்வது. அவர்கள் தங்கள் திருமணத்தின் மரியாதை மற்றும் அன்பை எவ்வாறு முன்மாதிரியாகக் கொண்டுள்ளனர் என்பதை பகிர்ந்து கொண்டனர்.

தங்களின் மிகவும் பரப்பரப்பான சயலிலும் மகிழுந்தில் பயணிக்கும்போது அல்லது இரவு உணவின் போது, உரையாடல்கள் மூலமாக தங்கள் குழந்தைகளுக்கு தரமான நேரத்தை ஒதுக்குவதை தம்பதியினர் உறுதி செய்கிறதாகத் தெரிவித்தாரகள் றார்கள். ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்களின் தனிப்பட்ட தேவைகள் மற்றும் குணநலன்களின் அடிப்படையில் தனித்துவமாக நடத்துவதன் முக்கியத்துவத்தை அவர்கள் வலியுறுத்தினர்.

ஆன்மீக வாழ்க்கையில் செபமாலை, பைபிள் பகிர்வு, தியானங்கள் மற்றும் ஒன்றாக இறைவேண்டல் செயவது ஆகியவை அடங்கும். அவர்கள் ஒன்றாக உணவு உண்பதும், மகிழ்ச்சியுடன் நன்றி செலுத்துவதும், உற்சாகமான வழிபாட்டு அமர்வுகளில் ஈடுபடுவதும் ஒரு முக்கிய அம்சமாகும். ஒன்றாக தியுப்பலியில் கலந்துகொள்வது அவர்களின் நம்பிக்கை வாழ்க்கையின் ஒரு மூலக்கல்லாகும், அங்கு தூய நற்கருணையின் முக்கியத்துவத்தை கிளெமென்ட் எடுத்துரைத்தார்.

குடும்பதில் பல சவால்கள் இருந்த போதிலும் மனம் தளர வேண்டாம் என்று பெற்றோருக்கு கிளமென்ட் மற்றும் பமீலா இருவரும் நினைவூட்டினர். இயேசுவின் வழிகாட்டுதலைப் பெற அவர்களை ஊக்குவித்தார்கள். ஒவ்வொரு குடும்பமும் கடவுளின் அன்பிலும் தயவிலும் வளர்ந்து வரும் இறைமக்கள் என்று பகிர்வை நிறைவுச் செய்தார்கள்

பெற்றோரே முதன்மை ஆசிரியர்

# மக்கள் வாழும் பகுதிகளில் ஆயுதப் பயன்பாடு தவிர்க்கப்பட வேண்டும்

பன்னாட்டு மனிதாபிமானச் சட்டம் மற்றும் மனித உரிமைக் கடமைகளுக்குப் பணிந்து நடக்க வேண்டுமென்றும், மக்கள் வசிக்கும் பகுதிகளில் பெரிய அளவில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் வெடிபொருள் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துதல் தவிர்க்கப்பட வேண்டுமென்றும் போர் மற்றும் மோதலில் ஈடுபடும் அனைத்துத் தரப்பினரையும் கேட்டுக்கொண்டுள்ளது சேவ் த சில் ரன் அமைப்பு.

வரும் ஆகஸ்ட் 12 ஆம் நாளோடு உக்ரைனில் போர் தொடங்கி 900 நாட்களை கடக்கும் நிலையில் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் அலுவலகமானது (OHCHR) 2022 பிப்ரவரி மாதம் முதல், போர் மற்றும் மோதலினால் மொத்தம் 2,184 குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர், 633 பேர் இறந்துள்ளனர் 1,551 பேர் காயமடைந்துள்ளனர் என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார் உக்ரைன் நாட்டிற்கான சேவ் த சில்ரன் அமைப்பின் தேசிய துணை இயக்குநர் Stephane Moissaing.

2024 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் குழந்தை இறப்புகள் 40 சதவீதம் அதிகரித்துள்ளன, 2023 ஆம் ஆண்டின் கடைசி ஏழு மாதங்களில் 243 பேர் இறந்த நிலையில் இவ்வாண்டின் முதல் ஏழு மாதங்களோடு ஒப்பிடுகையில் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கையானது 341 பேராக உயர்ந்துள்ளது வருத்தத்தை அளிப்பதாகவும் அவ்வறிக்கையில் வெளியிட்டுள்ளது

பொதுமக்கள் குழந்தைகள் அதிகமாக இருக்கும் இடங்கள் அனைத்தும் தாக்குதலில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், குழந்தைகள் மற்றும் குடும்பங்கள் பாதிக்கப்படுவதை உறுதி செய்ய உணவு மற்றும் தண்ணீர், பணம், பாதுகாப்பான இடங்களை வழங்குவதற் காக பல்வேறு கூட்டமைப்புக்களுடன் இணைந்து நெருக்கமாக செயல்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துள்ளார் Stephane Moissaing

# புறத்தூய்மை அல்ல அகத்தூய்மைப் பேணுவோம்!

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 22-ம் ஞாயிறு. எது இன்றியமையாதது, அகத் தூய்மையா? புறத்தூய்மையா’ என்ற கேள்வியையொட்டிச் சிந்திக்க நாம் அழைக்கப்படுகிறோம். ஆண்டவருடைய கட்டளைகள் ஞானம் மிக்கவை. வாழ்வு தருபவை. அத்தகைய கட்டளைகளை பின்பற்றி நடக்க வேண்டியது என்கிறது நமக்கு அழைப்புவிடுக்கின்றது இன்றைய முதல் வாசகம். அவர் நமது குரலுக்குச் செவி சாய்க்கும் தந்தை.

தொடர்ந்து, இரண்டாம் வாசகத்தில் பவுல் அடிகள் நலன்களுக்கெல்லாம் ஊற்று ஆண்டவர் ஒருவரே! அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் என்றும் அவர் வாக்குப் பிறழாதவர் என்றும் வலியுறுத்தி இம்மடலே எழுதுகிறார். இறைவார்த்தை கேட்பதோடு நின்றுவிடாமல், நம் செயல்களிலும் கடைபிடிக்க அழைப்புவிடுக்கிறார்.

நற்செய்தியில் இயேசுவின் சீடர்கள் கைகளைக் கழுவாமல் உண்பதைப் பார்த்த பரிசேயர்கள் மற்றும் எருசலேமிலிருந்து வந்திருந்த மறைநூல் அறிஞர்கள் சிலர் இயேசுவிடம் வந்து, “உம்முடைய சீடர்கள் மூதாதையரின் மரபினைக் கடைபிடிப் பதில்லையா?” என்று கேட்கின்றனர். அவர்களைப் பொறுத்தமட்டில் இது கேட்க வேண்டிய கேள்வி. அவர்களன் இக்கேள்வியைப் புறந்தள்ளாமல், அதனைப் பயன்படுத்திக்கொள்கின்ற இயேசு, கடவுளின் கட்டளையின் நோக்கம் என்ன என்பதையும், எது முக்கியமானது அகத் தூய்மையா? புறத் தூய்மையா? என்பதை விளக்குகிறார்.

ஆம், விண்ணக வாழ்வுக்குப் புறத்தூய்மை அல்ல, உள்ளத் தூய்மையே அவசியம் என்று அவர்களுக்குப் புரியும்படி எடுத்துரைக் கிறார். உருவத்தை அல்ல உள்ளத்தைப் பார்த்து எடை போடுபவர் கடவுள். உள்ளத்தில் உறைபவர் கடவுள். உள்ளம் என்ற அவரது இல்லத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ள இன்று ஆண்டவரால் நினைவூட்டப்படுகிறோம். ஆண்டவர் உரைப்பதைப்போல், வெளியேயிருந்து மனிதருக்குள்ளே சென்று அவர்களைத் தீட்டுப்படுத்தக் கூடியது ஒன்றுமில்லை. மனிதருக்கு உள்ளேயிருந்து வெளியே வருபவையே நம்மைந் தீட்டுப்படுத்தும். ஆகவே, உள்ளம் தூய்மையாக இருந்தால் அதிலிருந்து வெளிவருவதும் நல்லதாக இருக்கும்.

பல்வேறு செபவழிபாடுகள், பக்தி முயற்சிகள் , தியானங்கள், ஜெபமாலை, சிலுவைப்பாதை போன்றவை நமது உதட்டளவிலும் வெறும் வெளிவேடத்திலும், ஊர் மெச்சவும் இருந்தால் உள்ளம் தூய்மை பெறாது. அங்கே அழுக்குதான் அதிகமாகும். மாறாக, ஏழைகள்மீது அக்கறையும் அதன்வழியாக இறைவன் மீது அன்பும் கொண்டு வாழ்கின்றபோது நமது உள்ளம் நாளுக்கு நாள் தூய்மைப் பெறும்.

இயேசு பணித்தச் சீடத்துவ வாழ்வில், மறைநூல் அறிஞர்களைப் போன்று வெளிவேடமாக வாழாமல், நம்மோடு வாழும் துன்புறும் மக்களைக் கவனித்துக் கொள்வதே கடவுள் விடுக்கும் மேலான அழைப்பு என்று சிந்தித்துப் பார்த்தோம்.

-ஆர்.கே

### பொதுக்காலம்-22-ஆம் ஞாயிறு

| | |
|---|---|
| முதல் வாசகம்: | இ.ச.4:1-2,6-8 |
| திரு.பாடல் | 23: 1-3a. 3b-4. 5. 6 |
| 2-ம் வாசகம் | யாக் 1:17-18,21-22,27 |
| மாற்கு | மாற்கு 7:1-8,14-15,21-23 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 2**